# பத்திரிக்கை செய்தி

## கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வட்டார இயக்க மேலாண்மை அலகில் காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் (Block Co- Ordinator) பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், மகளிர் திட்டம் / மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் வாழ்வாதார திட்டப் பணிகள் மேற்கொள்வதற்கு அகஸ்தீஸ்வரம்-1, குருந்தன்கோடு-1, (ம) முஞ்சிறை-1 ஆகிய வட்டாரங்களில் காலியாக உள்ள 3 வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் (BC) பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தகுதியான பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணிக்கான தகுதிகள் :-

| வ. எண் | விவரம் | வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு |
|---|---|---|
| 1. | வயது | 28 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். (விண்ணப்பம் சமர்ப்பிக்க நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளன்று). |
| 2. | கல்வித்தகுதி | 1. பட்டதாரியாக இருக்க வேண்டும். |
| | | 2. MS-Office-ல் 3 மாத காலம் பயின்றதற்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் அல்லது கணினி அறிவியலில் அல்லது Computer Applications பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். |
| 3. | முன் அனுபவம் | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்ந்த திட்ட செயல்பாடுகளில் குறைந்த பட்சம் இரண்டு வருட காலம் பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| 4. | பிற தகுதிகள் | விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட வட்டாரத்திற்குள் குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். |
| | | தகுதியுள்ள பெண் விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். |
| 5. | ஊதியம் | மதிப்பூதியம் மாதம் ரூ.12,000/- |
| 6. | தேர்ந்தெடுக்கும் முறை | எழுத்து தேர்வு : 75 ★ |
| | | நேர்முக தேர்வு : 25 |
| | | கூடுதல் : 100 |

★. எழுத்து தேர்வில் 60% (45 மதிப்பெண்கள்)-க்கு அதிகமாக பெறும் நபர்கள் மட்டுமே நேர்முக தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி நாள் | : | **10.02.2023 மாலை 5.45 மணி வரை** |
| விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி | : | இணை இயக்குநர் / திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,<br>தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டிடம் (2-வது தளம்),<br>கன்னியாகுமரி மாவட்டம்,<br>(இ) நாகர்கோவில் - 629 001. |

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் (மகளிர் திட்டம்) காலியாக உள்ள மேற்குறிப்பிட்ட வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடத்திற்கு தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை கல்வித்தகுதி, வயது, முன் அனுபவச்சான்று ஆகியவற்றின் நகல்களுடன் இணைத்து மேற்குறிப்பிட்ட அலுவலக முகவரிக்கு நேரிலோ / அஞ்சல் மூலமோ 10.02.2023-க்குள் அனுப்பி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 10.02.2023-க்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் மற்றும் கல்வித்தகுதி, வயது, முன் அனுபவச்சான்று ஆகியவற்றின் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

30/1/23

மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர்
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இ) நாகர்கோவில்.

30.01.2023

E:\C.S. DEO\MT2 Folder\MT2.1668.21 BC Vacant Filed Paper News 28.01.2023.Docx